[1994 ஏப்ரல் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ச. அழகிரி, இருக்கையில் இல்லை.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக்கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. நா. சா. பழனிசாமி, பொதுக்கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக அக்குழுவின் 1993-94 ஆம் ஆண்டிற்கான 122-வது முதல் 125-வது வரையிலான (பத்தாவது சட்டமன்றப் பேரவை) நான்கு அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி கற்பகம் இளங்கோ, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1993-94 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 42 முதல் 45 வரையிலான அறிக்கைகளைக் குழுத்தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் தீர்மானங்கள். மதிப்பீட்டுக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 195-வது விதியின் கீழ், 1994–95 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி